**செய்தி வெளியீடு எண்: 02/2023** **நாள்: 10.01.2023**

**பத்திரிக்கை செய்தி**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் திரு. மு.அ.சித்திக் அவர்கள் ஸ்ரீ சிட்டி, தடாவில் உள்ள திருவாளர் அல்ஸ்டோம் டிரான்ஸ்போர்ட் இந்தியா நிறுவனத்தின் உற்பத்தி வசதியினை ஆய்வு செய்தார்**

சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-II இன் கீழ், ஒட்டுனர் இல்லாமல் இயக்கப்படும் 3 பெட்டிகளை கொண்ட 26 மெட்ரோ இரயில்களை (மொத்தம் 78 பெட்டிகள்) உருவாக்குவதற்கான ஒப்பந்தம் திருவாளர் அல்ஸ்டோம் டிரான்ஸ்போர்ட் இந்தியா நிறுவனத்திற்கு ரூபாய் தொள்ளாயிரத்து 46 கோடியே 92 லட்சம் மதிப்பில் 2022 நவம்பர் 17-ஆம் தேதி அன்று வழங்கப்பட்டது. இந்த இரயில் பெட்டிகள் ஸ்ரீ சிட்டி, தடாவில் அமைந்துள்ள அல்ஸ்டோம் உற்பத்தி நிலையத்தில் தயாரிக்கப்படுகின்றன. சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் முதல் கட்டத்திற்கான மெட்ரோ இரயில்களும் ஸ்ரீ சிட்டி அல்ஸ்டோமில் தயாரிக்கப்பட்டன.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குனர் திரு. மு.அ.சித்திக் இ.அ.ப., அவர்கள் அல்ஸ்டோம் உற்பத்தி நிலையத்தை ஆய்வு செய்து, இரயில்களின் உற்பத்திக்கான வசதிகளை மதிப்பீடு செய்தார். சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குனர் திரு. ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்), தலைமை பொது மேலாளர் ஏ.ஆர்.ராஜேந்திரன் (தொடர்வண்டி மற்றும் இயக்கம்), உயர் அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் இந்த ஆய்வின் போது உடனிருந்தனர்.

சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-2-ற்காக புதிதாக ஆர்டர் செய்யப்பட்ட மெட்ரோ இரயில் பெட்டிகள் தரம் 4-இல் ஒட்டுனர் இல்லாத செயல்பாடுகளுடன் மேம்படுத்தப்பட்ட அம்சங்களைக் கொண்டிருக்கும். இந்த ஆய்வின் போது, சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் அல்ஸ்டோம் தொழிற்சாலையில் உள்ள வசதிகளைப் பாராட்டினார். மேலும், விரைவில் உற்பத்தியைத் தொடங்கி சென்னை மெட்ரோ இரயில் திட்டம் கட்டம்-2-ற்கான இரயில்களை விரைவாக வழங்கும்படி கேட்டுக் கொண்டார்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**